செய்திக் குறிப்பு dt: 25.01.2018

காரைக்கால் மாவட்டம் டனால் தங்கவேல் கலையரங்கில் இன்று காலை 9.30 மணியளவில் தேசிய வாக்காளர் தினவிழாவை இன்று காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு. இரா. கேசவன். இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார்கள். திரு. சரவணன். I.R.S. அவர்கள் முன்னிலை வகித்தார்கள். முதலில் பரத நாட்டியம் மற்றும் வினாடி வினா போட்டிகள் நடத்தப்பட்டன. மேலும் பல்வேறு கல்லூரிகளின் நடனப் போட்டிகள் நடைபெற்றன. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பேசிய மாவட்ட ஆட்சியர் அவர்கள். நம் ஜனநாயக நாட்டில் 18. வயது பூர்த்தியான அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. உங்கள் வாக்கு அவ்வளவு முக்கியமானது. அதை நீங்கள் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. பணத்துக்கு நீங்கள் எந்த காரணம் கொண்டும் அடிமையாகிவிடக்கூடாது. இங்கு உங்களிடம் வினாடி வினா கேட்கும் போது நிலைமை பார்த்து பதில் சொல்லுகிறீர்கள். இதுவே இருக்கு வழி தான். இதே போல் நீங்கள் வாக்களிக்கும் போது சில பரிசு பொருட்கள் அளிப்பார்கள். அதற்காக நீங்கள் அடிமை ஆகக்கூடாது. உண்மையான நேர்மையான தலைவர்கள் வரவேண்டுமானால் இந்தியா வல்லரசாக வேண்டும் என்றால் உங்கள் வாக்கு நேர்மையானதாக இருக்க வேண்டும். நீங்கள் பணத்துக்கு அடிமையாகிவிட்டால் உங்கள் ஊரில் சாலை வசதி. விளக்கு வசதி மற்ற இதர வேலைகளுக்கு உங்களை

ஆள்பவர்களிடம் கேள்வி கேட்க முடியாது. நீங்கள் நேர்மையாக வாக்களித்தால் நேர்மையாக கேள்விகளை கேட்கலாம் என்று கூறினார்கள். இதே கருத்தையே திரு. சரவணன் IRS - அவர்களும் வலியுறுத்தி கூறினார்கள். இளம் வாக்காளர்களாகிய உங்கள் கையில் தான் இந்தியா வல்லரசாக வளரவேண்டும் என்றால் அதற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க நேர்மையாக வாக்களிக்க வேண்டும் என்று கூறினார்கள். மேலும் மில்லினியம் ஆண்டு 2000 - ஆயிரத்தில் பிறந்து 18-வயது பூர்த்தியான இளம் வாக்காளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. உடன் கூடுதல் மாவட்ட ஆட்சியர் திரு. மங்கலாட் தினேஷ், சார் ஆட்சியர் திரு. A. விக்ராந்த் ராஜா. இ.ஆ.ப. மற்றும் தேர்தல் அதிகாரி திருமதி. ரேவதி மற்றும் கண்காணிப்பாளர் திரு. புஷ்பநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். மேலும் 18 - வயது பூர்த்தியான இளம் வாக்காளர்களுக்கும் புத்தாயிரம் வாக்காளர்களுக்கும் வாக்காளர் அடையாள அட்டையும் வழங்கப்பட்டன. இறுதியில் வாக்காளர் உறுதிமொழி எடுக்கப்பட்டது.

25/1/18